VNR12T

விருதுநகர் மாவட்டம்

www.Padasalai.Net இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024 www.Trb Tnpsc.com

-----

வகுப்பு 12

தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

பகுதி - I

14×1=14

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1) உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது

ஆ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

இ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது

ஈ) காலநிலை மாறுபடுகிறது

2) பொருத்துக.

அ) உய்யும் வழி - 1. சிற்பி பாலசுப்பிரமணியம்

ஆ) கிடை - 2. தி.சு.நடராசன்

இ) நிலவுப்பூ - 3. கி.ராஜநாராயணன்

ஈ) தமிழ் அழகியல் - 4. பரலி.சு.நெல்லையப்பர்

அ) 2 3 4 1 ஆ) 4 3 1 2 இ) 4 3 2 1 ஈ) 4 2 3 1

3) சங்க இலக்கியத்தில் இல்லா சொற்கள் சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை .........

அ) மன்றங்களும் அவைகளும் ஆ) அறவோர், துறவோர்

இ) நிதியமும் குடும்பமும் ஈ) திருமணமும் குடும்பமும்

4) பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்
கல்லார்க் கொன்றாகிய காரணம் - தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன்றில்

அ) ஊழில் பெருவலி யாஉள மற்றொன்று
சூழினும் தான் முந்துஉறும்

ஆ) இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு

இ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு

5) சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க

அ) மணத்தக்காளியிலைச்சாறு ஆ) வசம்பு

இ) மாவிலைக்கரி ஈ) கடுக்காய்

6) படிமம் என்பதன் பொருள்

அ) ஒலி ஆ) காட்சி இ) செயல் ஈ) சொல்

7) ஆர்ப்பரிக்கும் கடல்
அதன் அடித்தளம்
மௌனம் மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது

அ) குறைகுடம் கூத்தாடும்

ஆ) இரைச்சல்

இ) நிறைகுடம் நீர்த்ததும்பல் இல்

இ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது

kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

8) யானை புக்க புலம்போல - இவ்வுமைக்குப் பொருத்தமான தொடர்

அ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது

ஆ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது

ஈ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது

9) மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?

அ) அங்கதம் ஆ) குறியீடு இ) தொன்மம் ஈ) படிமம்

10) கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

அ) பாரியும் காரியும் ஆ) நள்ளியும் ஓரியும்

இ) நல்லியக் கோடனும் குமணனும் ஈ) ஆய் அண்டிரனும் அதிகனும்

11) வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.

அ) பாலை பாடினான் - 1. தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்

ஆ) பாலைப்பாடினான் - 2. தேரினைப் பார்த்தான்

இ) தேரை பார்த்தான் - 3. பாலினைப் பாடினான்

ஈ) தேரைப்பார்த்தான் - 4. பாலைத் திணை பாடினான்

அ) 2, 3, 1, 4 ஆ) 4, 1, 3, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 4, 3, 1, 2

12) ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்

அ) சிவஞான முனிவர் ஆ) ஆறுமுக நாவலர்

இ) மயிலைநாதர் ஈ) இளம்பூரணார்

13) அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது

அ) புகழ் ஆ) அச்சம் இ) பெருமிதம் ஈ) நம்பிக்கை

14) Lobby- என்பதன் தமிழ்ச்சொல்

அ) ஓய்வறை ஆ) தண்டனை

இ) வரவேற்பறை ஈ) சமையல்கூடம்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** **3×2=6**

15) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணைவேண்டும் என்கிறார்?

16) முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?

17) 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர் - தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.

18) முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும்காரணத்தை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** **2×2=4**

19) 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

20) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

21) எந்தவொரு பொருளைப் பயன்படுத்தும் போதும் அதற்குப் பின்னால் உள்ள மனிதர்களின் உழைப்பை நாம் சிந்திப்பதில்லை. ஒரு தேநீரைப் பருகும்போது அதற்குப் பின்னால் உள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடை தருக.** **7×2=14**

22) மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

கலை, களை, கழை

kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

23) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்

24) **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

ஆ) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது

25) **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

பொலிந்தான் (அல்லது) தொழுதனர்

26) **இலக்கணக்குறிப்பு தருக**

தாழ்கடல் (அல்லது) உலகு

27) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க**

தலைமை

28) **கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் அமைக்க**

திரை, காண், கைதட்டல், மக்கள்

29) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக**

நிலத்தக் கௌறணும்டா அப்பத்தான் வகுறு நெறையும்

30) **மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

கண்துடைப்பு

ஆணி அடித்தாற் போல

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** **2×4=8**

31) 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருள் கற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32) வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.

33) கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.

34) இராமலிங்க அடிகள் கந்தவேலிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** **2×4=8**

35) புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் எத்தகைய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன?

36) மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

37) திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துகாட்டுடன் புலப்படுத்துக.

38) அறிவின் நகரம் சென்னை என்பதற்கான சான்றுகள் நான்கு தருக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×4=12**

39) இலக்கிய நயம் பாராட்டுக. (மையக் கருத்துடன் மூன்று நயங்களைச் சுட்டுக)

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே

-திரிகூடராசப்பக்கவிராயர்

kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

40) **தமிழாக்கம் தருக.**

Popular as the 'Cultural Capital' of India. Tamil Nadu is Extremely well-known for its marvellous temples and other architectural gems. The state rose to prominence primarily because of its well-known and outstanding Tanjore paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor.

41) தொழில் உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

42) பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

**(அல்லது)**

ஆ) யானைக்கும் அடி சறுக்கும்

43) ஏதேனும் ஒரு தலைப்பு குறித்து மரபு அல்லது புதுக்கவிதை புனைக.

கல்வி (அல்லது) சுற்றுச்சூழல்

## பகுதி - IV

**இருபக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44) அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுரை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக

**(அல்லது)**

ஆ) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன- நிறுவுக

45) அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு விளக்குக.

**(அல்லது)**

ஆ) மயிலையார் ஓர் 'ஆராய்ச்சிப் பேரறிஞர் என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க

46) அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க

**(அல்லது)**

ஆ) மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4+2=6**

47) அ) 'துன்பு உளது ........' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'மகற்கு' - என முடியும் குறள்

- - - - - -

kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com